1.3.2009 நாளிட்ட
தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு
வெளியீட்டில் வெளியிடப்பட
வேண்டியது

**சுருக்கம்**

ஆட்சி எல்லை– திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள குறுவட்டங்கள் சீரமைப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் (வ.நி.1(1)துறை**

**அரசாணை (நிலை) எண்.86** **நாள்.1.3.2009**

**படிக்க:**

முதன்மை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.பணி6(4)/8310/2008 நாள்.3.2.2009.

-----

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள குறுவட்டங்களை சீரமைப்பது தொடர்பான அறிக்கை பெறப்பட்டது.

2. முதன்மை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் அறிக்கை அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ஆத்தூர் மற்றும் சின்னாளப்பட்டி குறுவட்டங்கள் சீரமைக்கப்பட்டு அய்யம்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய குறுவட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது. இக்குறுவட்டம் ஆத்தூர் வட்டாட்சியரின் அதிகார வரம்பிற்குள் செயல்படும்.

3. ஆத்தூர் வட்டம் பலக்கனூத்து குறுவட்டத்திலுள்ள தோணிமலை வருவாய் கிராமம் அங்கிருந்து பிரிக்கப்பட்டு தருமத்துப்பட்டி குறுவட்டத்தில் சேர்க்கப்படுகிறது. மேலும் பலக்கனூத்து குறுவட்டத்திலுள்ள கன்னிவாடி வருவாய் கிராமம் கன்னிவாடிமலை (வடக்கு) மற்றும் கன்னிவாடிமலை (தெற்கு) என இரண்டாகப் பிரிக்கப்பட்டு கன்னிவாடிமலை (வடக்கு) வருவாய் கிராமம் தருமத்துப்பட்டி குறுவட்டத்திலும், கன்னிவாடிமலை (தெற்கு) வருவாய் கிராமம் அய்யம்பாளையம் குறுவட்டத்திலும் அமைக்கப்படுகிறது. மறு சீரமைப்பிற்குப் பின் இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு ஆத்தூர் வட்டத்திலுள்ள குறுவட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்கள் அமையும். மேற்கண்ட சீரமைப்பு 1.3.2009 முதல் நடைமுறைக்கு வரும். இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை 1.3.2009ம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்படும்.

4. புதிய அய்யம்பாளையம் குறுவட்டத்திற்கு ஒரு வருவாய் ஆய்வாளர் பணியிடமும் ஒரு குறுவட்ட நில அளவர் பணியிடமும் வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்கள், நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி சம்பளம் மற்றும் படிகள் பெறத் தகுதியானவர்கள் ஆவர்.

5. புதிய அய்யம்பாளையம் குறுவட்டத்திற்கு மரத்தளவாடங்கள் வாங்க ரூ.12,000/– வழங்கப்படுகிறது. அதனை பெற்று வழங்க திண்டுக்கல் மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:–

(அ) <u>பணியாளர் நியமனம் : –</u>

" 2053.00 – மாவட்ட நிருவாகம் –094 ஏனைய பணியாளரமைப்பு – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "
(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

<u>நில அளவை பணியிடம்</u>

"2029–00 நில வருவாய் 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்–I திட்டத்தில் சேராதது– AE மத்திய நில அளவை அலுவலகம் – 01 சம்பளங்கள்
( த.தொ.கு. 2029 00 102 AE 0107)

<u>அறைகலன்கள்:– ரூ.12,000/–</u>
" 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன்"
(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2008–09 ஆண்டு இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒப்பளிப்பு செய்யப்படும். அதனை எதிர்நோக்கி முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மேற்கண்ட செலவினத்தைப் பெற்று வழங்க அதிகாரமளிக்கப்படுகிறார். 2008–09–க்கான இறுதி திருத்திய மதிப்பீட்டில் இத்தொகை தவறாது சேர்க்க முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணையினை உடனடியாகச் செயல்படுத்த முதன்மை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண். 41/DS(KA)/2009 நாள். 28.2.2009 மற்றும் நிதியொதுக்க கூடுதல் பேரேடு எண்.1772 (ஆயிரத்து எழுநூற்று எழுபத்து இரண்டு) இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை –79 (1.3.2009 நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்
சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/ நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / நில சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை5.
கூடுதல் தலைமைச் செயலாளர் / இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை–5
கருவூலத் துறை இயக்குநர், பனகல் மாளிகை, சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
மாவட்டாட்சியர், திண்டுக்கல்
மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல்
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை.
அனைத்து துறை தலைவர்கள்,
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்புத்துறை,
ராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–93.
பொது (தேர்தல்) துறை, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை –104
செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துறை, சென்னை–9.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–35.
நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை செயலலளரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (வருவாய்) /வ.செ.பொ.II/வ.செ.ஓ.துறை, சென்னை–9.
வருவாய்த்துறை,(அனைத்து பிரிவுகள்) சென்னை–9.(தக்க தொடர் மேல் நடவடிக்கைக்காக)

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**(ந.சுப்ரமணியன்)**
அரசு சார்புச் செயலாளர்

இணைப்பு

அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டத்திலுள்ள குறுவட்டங்கள் 1.3.2009 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லையாக கொண்டு செயல்படும்.

| குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் பெயர் |
|---|---|
| 1. ஆத்தூர் | 1 .போடிகாமன்வாடி<br>2. பாளையங்கோட்டை<br>3. ஆத்தூர்<br>4. பாறைப்பட்டி<br>5. சீவல்சரகு<br>6. வீரக்கல்<br>7. கும்மம்பட்டி<br>8. வக்கம்பட்டி<br>9. பித்தளைப்பட்டி |
| 2.அய்யம்பாளையம் | 1.மணலூர்<br>2.சித்தரேவு<br>3.அய்யம்பாளையம்<br>4..நரசிங்கபுரம்<br>5.கன்னிவாடிமலை (தெற்கு) |
| 3. சின்னாளப்பட்டி | 1. பிள்ளையார் நத்தம்<br>2. என். பஞ்சம்பட்டி<br>3. ஆலமரத்துப்பட்டி<br>4. முன்னிலைக்கோட்டை<br>5. கலிக்கம்பட்டி<br>6. கீழக்கோட்டை<br>7. தொப்பம்பட்டி<br>8.அம்பாத்துரை |
| 4.தருமத்துப்பட்டி | 1.ஆடலூர்<br>2 .பன்றிமலை<br>3. பழைய கன்னிவாடி<br>4.சத்திரப்பட்டி<br>5. கசவனம்பட்டி<br>6.சிந்தலக்குண்டு<br>7.தாமரைக்குளம்<br>8. கன்னிவாடிமலை (வடக்கு)<br>9. தோணிமலை |

| | |
|---|---|
| 5. பலக்கனூத்து | 1. பலக்கனூத்து<br>2. நீலமலைக்கோட்டை<br>3. காமாட்சிபுரம்<br>4. கோடல்வாவி<br>5. தெத்துப்பட்டி<br>6. சிரங்காடு |
| 6. ரெட்டியார் சத்திரம் | 1. குருநாதநாயக்கனூர்<br>2. ஜெ.புதுக்கோட்டை<br>3. கொத்தப்பள்ளி<br>4. மாங்கரை<br>5. அம்மாபட்டி<br>6. குட்டத்துப்பட்டி<br>7. சில்வார்பட்டி<br>8. அழகுபட்டி<br>9. சுள்ளெறும்பு |

கே.தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மைநகல்/

பிரிவு அலுவலர்